**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

| | |
|---|---|
| Calendar Case No: | CC. 220/2020 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | அ.சா. 3 |
| Name : | திரு. பழனிவேல் |
| Father's Name/Husband Name: | திரு. ராஜோக்கியம் |
| Village : | குடிசல் |
| Taluk : | அரியலூர் |
| Age : | 73/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 11.02.2026

**(1969–ம் ஆண்டின் 54வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. S. தினேஷ், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**

**( எதிரி சின்னதுரை ஆஜர்)**
**முதல் விசாரணை**

நான் தற்போது குடிசல் கிராமத்தில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன். அ.சா.1 செல்வி என்னுடைய மகள் ஆவார். ஆஜர் எதிரியை தெரியும். கடந்த 3 ஆண்டுகளுக்கு முன்பாக நான் என்னுடைய கிராமத்தில் இருந்த போது என் மகள் வசிக்கும் கொளப்பாடி கிராமத்திலிருந்து காலை 8 மணியளவில் தொலைபேசி அழைப்பு வந்தது அதில் என்னுடைய மகளை எதிரி சின்னதுரை கம்பியால் அடித்துவிட்டதாகவும் அதனால் என் மகளுக்கு தொடைப்பகுதியில் வீங்கியிருப்பதாக தகவல் வந்ததன் பேரில் நான் சம்பவயிடத்திற்கு வந்தேன் என் மகள் மயக்கமாக இருந்தாள். அவரை நானும் எனது சகோதரர்களுடன் அ.சா.1யை பெரம்பலூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அழைத்து சென்றோம். அ.சா.1 புகார் கொடுத்தார். போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் எனது கிராமத்திலிருந்து கொளப்பாடிக்கு எத்தனை மணிக்கு வந்தேன் என்றால் காலை 9 மணிக்கு வந்துவிட்டேன். அ.சா.1யை எத்தனை மணிக்கு

மருத்துவமனையில் கொண்டு போய் சேர்த்தேன் என்றால் காலை 10லிருந்து 11 மணியிருக்கும். சம்பவத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். எனது மகள் குடும்பத்திற்கும் எதிரியின் குடும்பத்திற்கும் பாதை சம்மந்தமாக வழக்கு நடைபெற்று முன்விரோதம் இருக்கிறது என்றாலும் என் மகள் கொடுத்த பொய் புகாருக்கு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரி அ.சா.1யை குச்சியால் அடிக்கவில்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை : இல்லை**

Typed to my dictation in open court in the presence of Witness and read over to the witness and admitted by the witness to be correct.

Sd/-xxxxxxx
Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.